**சமஸ்த லங்கா சாசனாரக்சக நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமஸ்த லங்கா சாசனாரக்சக நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.
- வளங்கள் சிக்கனமாவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் / இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| குறித்த நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 79 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வருடத்திற்குள் தீர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படா விட்டாலும், சாதாரண செயற்பாட்டுச் சுழற்ச்சியில் | ரூபா 179,500 ரூபா 34,750 மற்றும் ரூபா 741,300 ஆனவை முறையே மீதமுள்ள கொடிகள் ஸ்டிக்கர் மற்றும் அச்சிடப்பட்ட | குறிப்பிடப்பட்ட பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தீர்க்கப்படுகின்ற நுகர்வு அல்லது விற்பனைகளுக்காக வைத்திருக்ககூடிய சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களாக வெளிக்காட்டப்படல் வேண்டும். எனினும் இருப்புப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருந்த முறையே ரூபா 179,500 மற்றும் ரூபா 34,750 ஆன கொடிகள் மற்றும் ஸ்டிக்கர் பெறுமதிகளும், இருப்புப் புத்தகத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 741,300 ஆன துணிகளிலான கொடிகளின் பெறுமதிகளும் நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிக் காட்டப்பட்டிருக்கவில்லை. | துணிகளாலான கொடிகளின் பெறுமதிகள் புத்தகங்களில் எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அட்டுறு அடிப்படையில் நிலையின வைப்பு வருமான வட்டி கணக்கிடப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டில் நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 1,001,458 ஆல் அதிகமாக மற்றும் பெற வேண்டியவ வட்டி ரூபா 1,070,491 ஆனது குறைவாக பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்தக் காரணத்திளால் சொத்துக்களுக்கு ஏற்பட்ட ரூபா 63,033 ஆன தேறிய குறைவடைவு, 2019 ஆம் வருடத்திற்கான பெற்ற வட்டியான ரூபா 300,397 ஆனது மீளாய்வாண்டின் வட்டி வருமானத்திற்கு சீராக்கல் மற்றும் மீளாய்வாண்டின் அதிகமாக கணக்கிடப்பட்ட ரூபா 231,364 ஆன வட்டி வருமானத்தின் மூலம் திரண்ட நிதியம் சீராக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் வட்டி வருமானம் சரியாகக் கணக்கிடப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | குறிப்பிடப்பட்ட வட்டி வருமாம் தொடர்பாக சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் பௌ/கொ/விய/04/01/2019 மற்றும் 2019 ஏப்ரல் 03 ஆந் திகதிய உள்ளகச் சுற்றறிக்கை | கொடி விற்பனை செய்வதற்கான பணம் சேகரித்தல் மற்றும் வங்கியிலிடல் தொடர்பான பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அறிக்கை தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கொடி விற்பனையின் போது இதில் குறிப்பிடப்பட்டிருந்த முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | குறிப்பிட்ட பொழிப்பு அறிக்கை தயாரித்தல் மேற்கொள்ளப் படல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மீளாய்வு ரூபா 2,651,735 ஆன பற்றாக்குறை என்பதுடன் அதற்கு எதிராக முன்னைய வருடத்தின் மிகை ரூபா 12,491,335 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 15,143,070 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப் பின்னடைவதற்கு கொடி விற்றல் வருமானம் மற்றும் நன்கொடைகள் வருமானம் முறையே ரூபா 4,145,363 ஆல் மற்றும் 10,000,000 ஆல் குறைவடைந்தமை மற்றும் செலவுகள் ரூபா 1,426,306 ஆல் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் வருடம் வரையில் பௌத்த பிள்ளைகளின் பெற்றோர் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பு பலன்களைப் பெறுவதற்காக புத்தசாசன அமைச்சிற்கு பெறப்பட்டிருந்த 748 விண்ணப்பங்கள் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் பரிந்துரையுடன் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சிற்கு அனுப்பட்டிருந்த போதிலும், அது சம்பந்தமாக தற்போதைய நிலைமை தொடர்பில் பின்தொடரல் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேலும் 2018 ஆம் வருடம் ஆரம்பத்திலிருந்து 2020 ஆம் வருடம் இறுதி | இச் செயற்திட்டம் அரச வெசாக் பண்டிகையுடன் இணைந்து நடாத்தப்பட்டு வருகின்ற செயற்திட்டமொன்று என்பதுடன் 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக இச் செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு முடியவில்லை. | பௌத்த பிள்ளைகளின் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பின் பலன்களை அடைந்து கொள்தல் தொடர்பின பின் தொடரல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரையில் 50 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும், அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கல்லை. | | |
| (ஆ) 2014 இன் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனங்களுக்கான சபை (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 6 ஆம் பந்தியின் (ஊ) உப பந்தியின் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான அளவு உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களை நியமித்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்ததுதல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேலதிக பதவியணியினருக்கு சம்பளம் மற்றும் சேவை நலன்புரித் தொகை வழங்குவதற்கு சமஸ்த லங்கா சாசனங்களுக்காக சபை நிதியத்தின் பணம் மற்றும் செயன் முறையொன்று காணப்படாமையால் தற்காலிக உத்தியோகத்தர் இருவர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் செயன்முறையொன்று தயாரிக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிதியத்தின் சேமிப்பு, நடைமுறை மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளில் ரூபா 48,456,720 ஆன தொகையொன்று பேணப்படுவதும் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 7,504,130 ஆகும். அதன் பிரகாரம் 2014 இன் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 3 ஆம் பந்தியின் (அ) இலிருந்து (ஓ) வரையான உப பந்திகளின் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிதியத்தை செயற்திறனாகப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்படவில்லை. | நாட்டில் நிலவிய தொற்று நோய் நிலைமை காரணமாக செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டம் செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிதியம் செயற்திறனாகப் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிதியம் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு கவனம் நெலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2012 ஆம் வருடத்தில் ரூபா 5,000,000 ஆன ஆரம்ப மூலதனமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த பௌத்த பிள்ளைகளின் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பில் 2020 திசெம்பர் 31 வரையில ˙ரூபா 8,791,275 ஆன தொகையொன்று காணப்பட்ட போதிலும் நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிதியம் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய தொற்று நோய் நிலைமை காரணமாக நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் அது தொடர்பாக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133 (ஆ) மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரமாணத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வொண்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அமைச்சினால் உள்ளகக்க கணக்காய்வொண்று செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வொன்று செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |